பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 10 திங்கட்கிழமை 28.11.2022 கதிர் 275

## மக்களின் போராட்டம் இன்னும் ஓயவில்லை

### ராஜபக்ஷக்களைக் கடுமையாக எச்சரிக்கின்றார் லால்காந்த




நாட்டில் மக்கள் போராட்டம் இன்னும் ஓயவில்லை என்பது ராஜபக்ஷக்கள் உள்ளிட்ட 8

# சட்ட திட்டம் எனக்குத் தெரியும் யாரும் கற்பிக்க வர வேண்டாம்!



### அதிகார மிடுக்குடன் ஆளுநர் அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

வட மாகாண ஆளுநர் என்ற வகையில் வடக்கு மக்களுக்கான அபிவிருத்திகளை மேற்கொள்ள உரிய சட்ட திட்டங்களை செயல்படுத்துவேன். யாரும் எனக்கு கற்பிக்க வேண்டாம்.

– இவ்வாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார். 2

## எஸ்டர் தாக்குதல் சந்தேகநபர் கொழும்பில் வெட்டிக்கொலை

கொழும்பு, மட்டக்குளிப் பிரதேசத்தில் நபர் ஒருவர் இன்று கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காரில் வந்த இருவர், இந்தப் படுகொலையை மேற்கொண்டனர்எனவிசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. 2

## இ.போ.ச. யாழ். சாலை பணியாளர்கள் இன்று முதல் திடீர் பணிப்பகிஷ்கரிப்பு

### பயணிகள் பெரும் அவதி






(இ.கலையமுதன்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் சாலை பணியாளர்கள் இன்று காலை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்., வசாவிளான் பகுதியில் கடந்த 2

## ஐஸ் போதைப்பொருள் பாவிப்போர் பைத்தியக்காரர்களாக மாறுவார்கள்

### மனநல விசேட வைத்தியர் எச்சரிக்கை

ஐஸ் போதைப்பொருள் பாவனையால் மனநல பாதிப்பு அதிகரிக்கும் என்று கராப்பிட்டி போதனா வைத்தியசாலையின் மனநல விசேட வைத்தியர் ரூமி ரூபன் தெரிவித்தார்.

பாடசாலை, பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் ஐஸ் ரக போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது என்றும் அவர் ஊடகங்களிடம் கூறினார்.

சிலர் குறித்த ஐஸ் போதைப் பொருளை, மாணவர்களிடத்தில் கொண்டு செல்வதற்குத் திட்டமிட்ட வகையில் முயற்சித்து வருகின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இதனால், இளைஞர்களின் எதிர்காலம் பாரியளவில் பாதிக்கப்படுகின்றது என்றும் 2

## பறிபோகுமா டயனாவின் எம்.பி. பதவி? அழைப்பாணை விடுத்தது நீதிமன்றம்

### ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறும் அதிரடி உத்தரவு



இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, இராஜாங்க 2

## மட்டக்களப்பில் ஆணின் சடலம்

மட்டக்களப்பு – காத்தான்குடி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி, திருநீற்றுக்கேணி குளம் பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

ஆரையம்பதியைச் சேர்ந்த 57 வயதுடைய வீரக்குட்டி தவராஜா என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2

## திருமலையில் ரயில் மோதி பெண் மரணம்

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயில் மோதியதில் பெண்ணொருவர் இன்று காலை பலியாகியுள்ளார். திருகோணமலை, பூம்புகார் வீதியில் வசித்து வரும் மேரி சாந்தி (வயது 47) என்ற நான்கு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் தொடர்பில் விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையைப் பொறிக்குள் சிக்கவைக்க இந்தியாவும் மேற்குலகமும் இணைந்து சதி

### விமல் இப்படிக் குற்றச்சாட்டு



இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தமது பொறிக்குள் இலங்கையைச் சிக்க வைப்பதற்கு இந்தியாவும், மேற்குலகமும் முயற்சிக்கின்றன.

–இவ்வாறு 'உத்தர லங்கா சபாகய'வின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

'உத்தர லங்கா சபாகய'வின் நுவரெலியா 8

## தந்தையை அடித்து கொலைசெய்த மகன்

தனது தந்தையை வாய் பேச முடியாத மகன் ஒருவர் அடித்துப் படுகொலை செய்த கொடூர சம்பவம் பதுளையில் இடம்பெற்றுள்ளது.

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, வெவெஸ்த்தை பெருந்தோட்டப் 2

## தமிழ், முஸ்லிம் விளையாட்டு வீரர்களுக்கு விழும் 'வெட்டு'க்களை உடன் நிறுத்துங்கள்

### சபையில் மனோ எம்.பி. ஆக்ரோஷம்



இன்று தேசிய விளையாட்டு அணிகளில் தமிழ், முஸ்லிம் வீரர்களுக்கு விழும் 'வெட்டு'க்களை நிறுத்துங்கள். கிரிக்கெட் இந்த நாட்டின் ஐந்தாம் மதம். கிரிக்கெட்டை, கால்பந்தை, விளையாட்டைக் கொண்டு தேசிய ஐக்கியத்தை உருவாக்க உழையுங்கள்.

–இவ்வாறு தமிழ் முற்போக்குக் 8

## 25 மீனவர்கள் 5 படகுகளுடன் இன்று கைது

(ந.லோகதயாளன்)

நெடுந்தீவுக்கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள் நுழைந்த இந்திய மீனவர்களின் 5 படகுகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். 8

## சட்ட திட்டம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆளுநர் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் உள்ளவை அப்படியே வருமாறு–

ஆளுநர் தான் நினைத்தபடி நியதிச் சட்டங்களை உருவாக்கி வர்த்தமானி வெளியிடுகிறார் என சிலர் தம்மை மக்கள் மத்தியில் தலைவர்களாகக் காட்ட முயல்கின்றனர். வட மாகாண சபை செயற்பாட்டில் இல்லாத காலத்தில் மக்கள் நலன் சார்ந்த பல நியாதிச்ச சட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு செயல்படுத்தாமல் உள்ளன.

ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் 154ஸீ மாகாண சபையொன்றுக்கு நியதிகளை இயற்றும் அதிகாரம் அவற்றில் உள்ள விடயங்கள் தொடர்பான நிறைவேற்று அதிகாரம் அந்த மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்ட மாகாண ஆளுநரால் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையின் அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது கீழ்நிலை அதிகாரிகள் மூலமாகவோ செயல்படுத்தப்படும். பிரிவு 154ய் அதைத்தான் அரசியலமைப்புச் சட்டம் சொல்கிற நிலையில் ஒவ்வொரு சட்டமும் மாகாண நிர்வாகத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

பல சட்டங்கள் பல ஆண்டுகளாக முடிக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ள நிலையில் சிலருக்கு மறுபரிசீலனை தேவைப்படுகிறதோடு தமது அதிகார வரம்பு தெரியாமல் பேசுகின்றனர். அரசியலமைப்பில் எழுதப்பட்ட மகாண அதிகாரங்கள் பல தமது செயல்பாடுகளை செய்யாத நிலையில் அவை ஒவ்வொன்றாகச் சரிபார்க்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நிர்வாக ரீதியாகவும் இடைவெளிகள் உள்ளதோடு அதிபர், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் யாழ்ப்பாணத்திற்கு சாதகமான கொள்கையைக் கொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் மாகாண அரச சேவை சில வட்டத்துக்குள் முடக்கி விடப்பட்ட நிலையில் சகல மக்களுக்கும் சென்றடையும் வகையில் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

ஆகவே ஆளுநர் என்ற வகையில் வடக்கு மக்களுக்கான அபிவிருத்திகளை மேற்கொள்ள உரிய சட்ட திட்டங்களை செயல்படுத்துவேன். யாரும் எனக்கு கற்பிக்க வேண்டாம்.– என அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சில நாள்களாகக் குறித்த நபர் காணாமல்போயிருந்த நிலையில், குடும்பஸ்தர் ஒருவர் அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

அதன்போது திருநீற்றுக்கேணி குளம் பகுதியில் காணாமல்போனவரது பாதணி இருப்பதைக் கண்டு குளப்பகுதியில் தேடிய போதே சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் வலிப்பு நோயினால் நீண்டகாலம் பாதிக்கப்பட்டவர் என்றும், மதுபோதைக்கு அடிமையானவர் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி வி.தியாகேஸ்வரியின் உத்தரவுக்கமைய காத்தான்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வேலு மணிமாறன் சம்பவ இடத்துக்கு விரைந்து, சடலத்தைப் பார்வையிட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

## இ.போ.ச ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதன்கிழமை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மோதியதில் மாணவன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். இந்த விபத்து சம்பவத்தின் போது , இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சாரதி மீது அங்கிருந்த சிலர் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். அதில் காயமடைந்த சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாரதி மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஏனைய தாக்குதலாளிகளையும் பொலிஸார் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும், தமது பாதுகாப்பை நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரியுமே இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் சாலை பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தினுள் பஸ்களை நுழைய விடாது தடுப் புக்களை அவர்கள் போட்டுள்ளனர். அதனால் வெளிமாவட்ட பஸ்கள், பஸ் நிலையத்தினுள் நுழைய முடியாததால் , வீதிகளில் நிறுத்தி வைக் கப்பட்டுள்ளன. அதேவேளை, திடீரென இன்று அவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையால் , தூர இடங்களுக்கு வேலைக்குச் செல்வோர், பொதுமக்கள் எனப் பலரும் அவதிக்கு உள்ளாகியுள்ளார்கள்.

## பறிபோகுமா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் டயனா கமகே உள்ளிட்ட பிரதிவாதிகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பிரதிவாதியான டயனா கமகேவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய குழு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## ஈஸ்டர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்த நபர் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்று தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## ஐஸ் போதைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை, ஐஸ் உள்ளிட்ட நச்சுப் போதைப் பொருள்களுக்கு, மாணவர்கள் அடிமையாகுவதைத் தடுப்பதற்குக் கொழும்பை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட முன்னோடி வேலைத்திட்டம் மேலும் விரிவுப்படுத்தப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். எதிர்வரும் ஜனவரி மாதம் 2ம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தஎதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## தந்தையை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியில் 34 வயதுடைய வாய் பேச முடியாத மகன், தனது 60 வயதுடைய தந்தையை மரக்கட்டையால் தலையில் தாக்கியுள்ளார். இதனால் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார். இந்தச் சம்பவம் நேற்று மாலை சுமார் 6.30 மணிய ளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் 34 வயதுடைய வாய் பேச முடியாத மகனை நேற்றிரவு பதுளைப் பொலிஸார் கைது செய் துள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பதுளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். தாக்கிய இளைஞரின் தாயார் இரண்டு திருமணங்கள் முடித்தவர் என்பதுடன் முதல் கணவர் அவரை விட்டுச் சென்றுள்ளார் எனவும், தாயாரின் இரண்டாவது கணவரையே மகன் தாக்கிக் கொலை செய்துள்ளார் எனவும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சமூகக் குற்றம்

நாட்டில் மதுபாவனை 30 வீதத்தினால் குறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களிடையே ஐஸ் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பில் பெற்றோர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் அவர்கள் தொடர்புகொள்ளும் நபர்கள், செல்லும் இடங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் சபை தெரிவித்துள்ளது.

இந்த நெருக்கடி, சாதாரண வாழ்வில் மக்களால் நேரடியாக அவதானிக்கப்படும் நிலைமைக்கு வந்துவிட்டது. சமூகத்தின் எதிர்காலம் குறித்துப் பேரச்சமான சூழலை இந்த ஆபத்து ஏற்படுத்தி நிற்கிறது.

கஞ்சா போன்றவற்றைத் தாண்டி ஐஸ், ஹெரோயின் போன்ற 'சிந்தெட்டிக்' ரகப் போதைப்பொருள்கள் மிக மோசமான ஆபத்தை ஏற்படுத்த வல்லன.

ஐஸ் போதைப்பொருள் பயன்பாட்டினால் மனநோய் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளதாக மனநோய் சிறப்பு மருத்துவர் டொக்டர் ரூமி ரூபன் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களையும் இளைஞர் சமூகத்தையும் ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையாக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இன்றைய சமூகத்தில் மனநோய்க்கும் ஐஸ் என்ற போதைபொருள் தெளிவான தொடர்பு இருக்கிறது. கேட்டால் ஐஸ் எடுத்தவர் என்கிறார்கள். இறுதியில் இவர்களுக்கு ஐஸ் போதைப் பொருளுளால் பல்வேறு மனநோய்களுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பாடசாலை மாணவர்களை – குறிப்பாக இளம் தலைமுறையினரை – இந்த ஐஸ் போதைபொருள் அழிக்கும் வகையில் காணப்படுகின்றது. இது இன்று இலங்கையில் ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்'' – என்று அவர் கூறுகிறார்.

பாடசாலை மாணவர்கள் மீது பெற்றோரின் கவனக்குறைவு சிறுவர்களை போதைப்பொருள் பாவனைக்கு தூண்டுவதற்கு உதவியுள்ளதாக டொக்டர் ரூமி ரூபன் தெரிவிக்கும் கருத்தில் பிழையிருப்பதாகத் தெரியவில்லை.

மாணவனை அத்திசையில் நாட இடமளித்து – வாய்ப்புக் கொடுத்து – சந்தர்ப்பம் வழங்கி – பார்த்திருக்கும் சமூகத்தின் பெருங் குற்றம் இது.

## பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஆராய்வதற்கு வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவிற்கு விஜயம்!



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அமெரிக்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதற்கமைய இவர் இன்று (செவ்வாய்க்கிழமை) அமெரிக்கா செல்லவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடவுள்ளார். மேலும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஆண்டனி பிளிங்கிங் மற்றும் அந்நாட்டின் உயர்மட்டப் பிரதிநிதிகளையும் சந்திகவுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுற்றுலாப்பயணிகளில் ரஷ்யர்களே அதிகம்!

குளிர்காலத்துக்கு முன்னதாக இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளில் ரஷ்யா முன்னிலை பெற்றுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நவம்பர் முதலாம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை 41 ஆயிரத்து 308 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் அவர்களில் 10 ஆயிரத்து 66 பேர் ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்த வரையில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. அந்தக் காலப்பகுதியில் 7021 இந்திய சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ள அதே வேளை பிரித்தானியாவில் இருந்து 3 ஆயிரத்து 276 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு ஆளுநர் ஜீவன் இந்தியாவிற்கு விஜயம்!



வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளம் தொழில் முனைவோர் பங்குபற்றும் மாநாடு ஒன்றுக்காகவே அவர் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

மதுரையில் நடக்கும் குறித்த மாநாடு இரு தினங்கள் இடம்பெறவுள்ளதாக ஆளுநர் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

## துயிலுமில்லங்களை மீளஒப்படைத்து மக்களின் நினைவேந்தும் உரிமைக்கு இடமளியுங்கள்!




கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லவளாகத்தை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையிடம் ஒப்படைத்து எமது மக்களின் நினைவேந்தும் உரிமைக்கு அரசாங்கம் இடமளிக்க வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் போரில் ஆகுதியாகிய மறவர்களுக்கு நினைவஞ்சலிச் சுடரை ஏற்றிய பின் கருத்துரைக்கும் போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்ட சடலங்களைக்கூட கிளறி எறிந்து இனவெறியைத் தீர்க்கவேண் டும் என்ற எண்ணம் இலங்கையின் அரச கட்டமைப்பில் வேரூன்றி இருக்கையில் நாடு முன்னேறிச் செல்வதற்கே இடமில்லை என்றும் தெரிவித்தார். உலக அளவில் எதிரியாக இருந்த போதும் போரில் கொல்லப்பட்டவர்களுக்கு கௌரவமளித்து தூபிகளை அமைத்துள்ள போதும் இன்றும் கோப்பாய் உள்ளிட்ட பல துயிலும் இல்லங்கள் இராணுவ முகாம்களாக உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## பெரிய வெங்காயத்தின் விலை குறையும் வாய்ப்பு!



விசேட சரக்கு வரி விகிதத்தை குறைக்க உணவுக் கொள்கை குழு பரிந்துரைத்துள்ளதால் சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை குறையும் என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.


வெங்காயத்துக்கான தேசியத் தேவை வருடத்திற்கு சுமார் 3 லட்சம் மெற்றிக் தொன் மற்றும் இறக்குமதித் தேவையில் 86 வீதம் பூர்த்தி செய்யப்படுகிறது. நாடு வெங்காயத் தேவையில் 14 சதவீதத்தை உற்பத்தி செய்கிறது.

நவம்பர் மூன்றாம் வாரத்தில், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ வெங்காயத்தின் சில்லறை விலை 290 – 390 ரூபாவாகவும் உள்ளூர் பெரிய வெங்காயம் கிலோ 340 – 400 ரூபா ஆகவும் இருந்தது.

# ஊரடங்கைத் தளர்த்தக் கோரி வீதிக்கு இறங்கிய சீன மக்கள்







பீஜிங், நவ.28

உலகம் முழுவதும் கொரோனா கட்டுக்குள் வந்துள்ள நிலையில்சீனாவில்கொரோனாமீண்டும்வேகமெடுத்துள்ளது. கடந்த சில நாள்களாக தினமும் 30 ஆயிரம் பேர் வரையில் புதிதாக கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. வைரஸ் பரவல் அதிகரிப்பு காரணமாக பல்வேறு மாகாணங்களில் கடுமையான ஊரடங்கு கட்டுப்பாடுகளை சீனா விதித்து வருகிறது.

அந்த வகையில் ஜிங்ஜங்க் மாகாணத்தில் 100 நாள்களுக்கு மேலாக முழு மற்றும் கடுமையான ஊரடங்கு அமுலில் உள்ளது. இதனிடையே, ஊரடங்கு அமுலில் உள்ள ஜிங்ஜங்க் மாகாணத்தில் உரும்யூ நகரில் கடந்த 24 ஆம் திகதி ஓர் அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தில் குழந்தைகள் உள்பட 10 பேர் உயிரிழந்தனர். ஊரடங்கு காரணமாக

அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடுகளை அதிகாரிகள் சீல் வைத்து மூடியுள்ளனர். இதனால், அடுக்குமாடி குடியிருப்பில் தீ பற்றியபோது வீடுகளை விட்டு மக்கள் வெளியேற முடியாமல் உயிரிழந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்நிலையில், அரசு விதித்துள்ள கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிராக சீனாவில் மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

உரும்யூ நகரில் நேற்று முன் தினம் இரவு திரண்ட மக்கள் சீன அரசுக்கு எதிராகவும், கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடுகளை தளர்த்தவும் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேபோல், சீன அதிபர் ஜி ஜின்பிங்கிற்கு எதிராகவும் மக்கள் கோஷங்களை எழுப்பினர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை பொலிஸார் கைது செய்திருந்த நிலையிலும், போராட்டம் மாகாணத்தில் பல்வேறு பகுதிகளுக்கும் வேகமாக பரவி வருவதாதாகக் கூறப்படுகின்றது.

## வலிமையான அணுசக்தி நாடாகுவதே இலக்கு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் சூளுரை



சியோல், நவ.28

வடகொரியா பல்வேறு நாடுகளின் எதிர்ப்பையும் மீறி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகளை அடிக்கடி நடத்தி வருகிறது. அண்மையில் இந்தத் தொடர் ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்ட பல இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வும் அளிக்கப்பட்டது. இதனிடையே, உலகின் மிக சக்திவாய்ந்த அணுசக்தியை வைத்திருப்பதே தனது நாட்டின் இறுதி இலக்கு என்று வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் செய்தி வெளியிட்டுள்ளார்.

புதியகண்டம்விட்டுகண்டம் பாயும் ஏவுகணையின் சோதனையை கிம் ஆய்வு செய்த பின்னர், கடநத வெள்ளிக் கிழமை அமெரிக்க அணு ஆயுத அச்சுறுத்தல்களை அணு ஆயுதங்கள் மூலம் எதிர்கொள்வதாக உறுதியளித்த மையுடன் இந்த அறிவிப் பையும் வெளியிட்டுள்ளார். மேலும், தற்போது சோதனை செய்யப்பட்டுள்ள ஏவுகணை உலகின் வலுவான மூலோபாய ஆயுதம் என்று கூறியுள்ளமையுடன், இது வட கொரியாவின் உறுதியையும், இறுதியில் உலகின் வலிமையான இராணுவத்தை உருவாக்கும் திறனையும் நிரூபிப்பதாகக் கூறினார். வட கொரிய விஞ்ஞானிகள் பாலிஸ்டிக் ஏவுகணைகளில் அணு ஆயுதங்களை ஏற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் ஓர் அற்புதமான முன்னேற்றத்தை அடைந்துள்ளனர் என்று கிம் இதன்போது தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மின்கம்பத்தில் மோதிய சிறிய விமானத்தினால் அமெரிக்காவில் ஒரு லட்சம் வீடுகள் இருளில்!

வொஷிங்டன்,நவ.28

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணம் மொவ்ண்ட்கொமெரி நகரத்திர் உள்ள மின்விநியோகக் கம்பத்தில் சிறியரக விமானம் ஒன்று மோதியதால் அங்கு மின்சாரம் தடைப்பட்டதாகக் தெரிவிக்கப்பட்டது.

இந்நகரின் ஹைதுர்பர்க் என்ற பகுதியில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வீடுகள் உள்ள நிலையில், மொவ்ண்ட்கொமெரி நகருக்கு மின் விநியோகம் வழங்கும் மின் கம்பி மீதே நேற்று இரவு இந்தச் சிறிய ரக விமானம் மோதியது. 2 பேர் பயணித்த சிறிய ரக விமானம் மின் கம்பி மீது மோதி அந்தரத்தில் தொங்கியது. விமானம் மோதியதால் மின் இணைப்புத் தடைப்பட்டது.

இதனால், ஒரு லட்சம் வீடுகள், தொழில்நிறுவனங்களில் மின் இணைப்பு தடைப்பட்டிருந்தது. இது குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மின்கம்பி மீது மோதி அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்த விமானத்தில் சிக்கிய 2 பேரையும் பத்திரமாக மீட்டனர். மேலும், விமானம் மோதியதால் இருளில் மூழ்கிய நகருக்கு மின் இணைப்பை மீண்டும் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இறுதிச் சடங்கில் நிலச்சரிவு 14 பேர் வரையில் உயிரிழப்பு

### கமரூனில் பதிதாபம்

யவுண்டே, நவ.28

மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள கமரூன் நாட்டின் தலைநகர் யவுண்டேவில், கனமழை காரணமாக இந்த ஆண்டு பல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. வெள்ளத்தால் அந்நகரின் உள்கட்டமைப்பு சிதைந்தது. ஆயிரக்கணக்கானோர் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.


இந்நிலையில் அங்குள்ள 20 மீட்டர் உயரமுள்ள அணைகட்டுப் பகுதியின் அடிவாரத்தில் அமைந்துள்ள மைதானத்தில் இறுதிச் சடங்கு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் அப்பகுதி மக்கள் அதிகளவில் கலந்து கொண்டிருந்தனர்.

அப்போது நிலச்சரிவு ஏற்பட்டு மண்சுவர் அவர்கள் மேல் இடிந்து விழுந்ததாகக் கூறப்படுகின்றது. இந்தத் திடீர் விபத்தில் சிக்கி குறைந்தது 14 பேர் உயிரிழந்தனர் என அப்பகுதி ஆளுநர் நசெரி பால் தெரிவித்துள்ளார். மேலும், மீட்புப் படையினரின் உதவியுடன் நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் பணி நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.





# இந்தியா பரிசளித்த காந்தி சிலையை ஐ.நா வளாகத்தில் திறப்பதற்கு ஏற்பாடு



நியூயார்க், நவ.28

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் தலைவர் பொறுப்பை இந்தியா வருகின்ற டிசம்பர் மாதம் முதல் ஏற்கவுள்ள நிலையில், இதையொட்டி மகாத்மா காந்தியின் மார்பளவு சிலை ஒன்றை ஐ.நா.வுக்கு இந்தியா பரிசளித்துள்ளது. இந்தச் சிலை ஐ.நா. தலைமையகத்தின் வடபகுதியில் உள்ள புல்வெளியில் நிறுவப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அடுத்த மாதம் 14 ஆம் திகதி மத்திய வெளியுறவு அமைச்சர் ஐ.நா. செல்கின்ற வேளையிலே இந்தச் சிலை திறக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தச் சிலை திறப்பு விழாவில் ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் மற்றும்பாதுகாப்பு கவுன்ஸிலின் 15 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய தேசத்தந்தை மகாத்மா காந்தியின் இந்தச் சிலையை புகழ்பெற்ற சிற்பியும், பத்மஸ்ரீ விருது பெற்றவருமான ராம் சுதர் வடிவமைத்து உள்ளார். இதன் மூலம் ஐ.நா. தலைமையகத்தில் முதல் முறையாக மகாத்மா காந்தி சிலை நிறுவப்படவுள்ளது.

முன்னதாக கடந்த 1982 ஆம் ஆண்டு சூரிய கடவுளின் சிலை ஒன்றை இந்தியா ஐ.நா.வுக்கு பரிசளித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இருளில் மூழ்கியிருந்த அயோத்தி மின் விளக்குகளால் ஒளிர்கின்றது

### உத்தரப் பிரதேச முதல்வர் பெருமிதம்




அயோத்தி, நவ.28

உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் நேற்று அயோத்திக்கு சென்றிருந்தமையுடன், ராம ஜென்மபூமியிலும், அனுமன் கோவிலிலும் தரிசனம் செய்தார். இந்த விஜயத்தில் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி நடக்கும் ராமர் கோவில் கட்டுமான பணிகளை ஆய்வு செய்தமையுடன், டெதி பஜார் பகுதிக்கு சென்று பல்வேறு திட்டப்பணிகளின் முன்னேற்றத்தை அவர் பார்வையிட்டார். பின்னர், அயோத்தியில் ரூ.1,057 கோடி மதிப்புள்ள வளர்ச்சி திட்டங்களை யோகி ஆதித்யநாத் தொடங்கி வைத்தார்.

அந்த நிகழ்ச்சியில் அவர் உரையாற்றுகையில் 500 ஆண்டு காலகாத்திருப்புக்குபிறகு, அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட்டு வருகிறது. இதற்கு பிரதமர் மோடியின் வலிமையான மனஉறுதியே காரணம். 2017 ஆம் ஆண்டுக்கு முன்பு, அயோத்தி இருளில் மூழ்கி கிடந்தது.

தற்போது, எல்.இ.டி. விளக்குகளால் ஒளிர்கிறது. தடை யற்ற மின்சாரம் கிடைக்கிறது. இரட்டை என்ஜின் அரசு, அயோத்தியை மாநகராட்சி யாக உயர்த்தி உள்ளது.

'அயோத்தியின் மேம்பாட்டுக்காக ரூ.30 ஆயிரம் கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் ஒப்புதல் அளித்துள்ளன. உலகத்தர வசதிகளுடன் அயோத்தியை மத, வேத, ஆன்மிக நகராக உருவாக்க உறுதி பூண்டுள்ளோம். அது மட்டுமின்றி, ராமர் பிறந்த இடத்தை சர்வதேச சுற்றுலா தளமாக்க உறுதி பூண்டுள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## இந்தியக் குடியரசுத் தின விழாவில் சிறப்பு அதிதியாக எகிப்து அதிபர்



இந்தியா, நவ.28

இந்தியக் குடியரசுத் தின விழாவில் எகிப்து அதிபர் அப்தெல் பத்தா அல்-சிசி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார் என்று வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எகிப்து அரபுக் குடியரசின் அதிபர் 2023ஆம் ஆண்டின் இந்தியக் குடியரசுத் தினத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வது இதுவே முதல் முறை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி அல்-சிசிக்கு அனுப்பிய முறையான அழைப்பிதழை, கடந்த அக்டோபர் 16ஆம் திகதி அன்று வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் எகிப்திய அதிபரிடம் கையளித்தார். மேலும், இந்தியாவும் எகிப்தும் நாகரீக மற்றும் ஆழமான வேரூன்றிய மக்களிடையேயான உறவுகளின் அடிப்படையில் அன்பான மற்றும் நட்புறவை அனுபவிக்கின்றன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பனி மூட்டத்தால் சென்னையில் விமான சேவைகள் பல பாதிப்பு



சென்னை,நவ.28

சென்னை புறநகர் பகுதிகளில் நேற்று காலை 6.30 மணியில் இருந்து கடுமையான பனிமூட்டம் நிலவியமையால், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை 6.30 மணிக்கு மஸ்கட்டில் இருந்து 284 பயணிகளுடன் வந்த விமானம் கடும் பனிமூட்டம் காரணமாக சென்னையில் தரையிறங்க முடியாமல் பெங்களூருக்கு திருப்பிவிடப்பட்டதாகவும், அதேபோல் காலை 6.55 மணிக்கு குவைத்தில் இருந்து சென்னைக்கு 182 பயணிகளுடன் வந்த விமானம், சென்னையில் தரையிறங்க முடியாமல் நீண்ட நேரமாக வானில் வட்டமடித்து கொண்டு இருந்த நிலையில், அதன் பிறகும் தரையிறங்க முடியாததால் ஐதராபாத்துக்கு திருப்பி விடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், காலை 7.25 மணிக்கு 132 பயணிகளுடன் புனேவில் இருந்து வந்த விமானமும் சென்னையில் தரையிறங்க முடியாமல் ஐதராபாத்துக்கு திருப்பிவிடப்பட்டது. மேலும் ஐதராபாத், பெங்களூரு, கொல்கத்தா, மும்பை உள்ளிட்ட நகரங்களில் இருந்தும், மலேசியாவில் இருந்தும் வந்த 7 விமானங்கள், சென்னையில் நிலவிய பனிமூட்டத்தால் வானில் நீண்டநேரமாக வட்டமடித்து விட்டு தாமதமாக தரையிறங்கியிருந்தன எனப்படுகின்றது.

இதே போல் சென்னையில் இருந்து புறப்படும் ஐதராபாத், விசாகப்பட்டினம், ராஜமுந்திரி, மதுரை, மும்பை உள்ளிட்ட 8 விமானங்கள் சுமார் அரை மணி நேரம் வரை தாமதமாக புறப்பட்டுச் சென்றன என்றும், பனிமூட்டம் விலகியதும் மீண்டும் விமான சேவை இயல்பு நிலைக்கு திரும்பியது என்றும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

## ரயில் நிலைய நடைமேம்பாலம் இடிந்ததில் பெண் ஒருவர் சாவு


மும்பை, நவ.28

மராட்டியத்தில் பல ரயில் நிலையங்களில் நடைமேம்பாலங்கள் நீண்டகாலமாக பராமரிக்கப்படாமல் உள்ள நிலையில், சந்திராப்பூரில் உள்ள பல்ஹர்ரா ரயில் நிலையத்தில் நேற்று மாலை 5.10 மணி அளவில், புனே செல்லும் ரயில் வந்து நின்றபோது இந்த ரெயிலில் ஏறுவதற்காக பயணிகள் அங்கிருந்த ரெயில்வே நடைமேம்பாலம் வழியாக அதிக அளவில் நடந்து சென்றனர்.

இந்த நிலையில் ரயில்வே நடைமேம்பாலத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்தமையால் அந்த பாலத்தில் நடந்து சென்ற சிலர் சுமார் 20 அடி உயரத்தில் இருந்து கீழே உள்ள ரயில் தண்டவாளத்தில் விழுந்து காயம் அடைந்தனர். காயம் அடைந்த 13 பேர் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இந்த விபத்தில் 4 பேர் படுகாயம் அடைந்த நிலையில், பெண் ஒருவர் பலியாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.



# கஞ்சிகுடிச்சாற்றில் மாவீரர்களை அஞ்சலிக்க நேற்றுக் கரைபுரண்டோடிய மக்கள் வெள்ளம்



## கதறி அழுத ஒப்பாரியினால் கலங்கியது காடு
## உணர்வு பூர்வமாக இடம்பெற்ற நினைவேந்தல்













(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள கஞ்சிகுடிச்சாற்றில் உணர்வு பூர்வமாக பேரெழிச்சியுடன் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம் மாவீரர்களின் பெற்றோர்கள் கதறியழுத கண்ணீரால் கதிகலங்கி நின்றது. சிறிது நேரம் ஒப்பாரி ஓலம் விண்ணைப்பிளந்தது.

அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவீரர் தின நிகழ்வில் சுமார் மூவாயிரம் மக்கள் கண்ணீர் மல்க கலந்து கொண்டனர். அரசியல் பிரமுகர்கள், முப்படையினர், புலனாய்வுப் பிரிவினர் என பலதரப்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த பல வருடங்களுக்கு பிற்பாடு இம்முறை அதிகளவான மக்களோடு மிகவும் உணர்ச்சி பொங்க மாவீரர் தின நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டம் எங்கும் இருந்து பஸ்களிலும் ட்ரக்டர்களிலும் வான்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் மக்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். பெருந்திரளான இளைஞர்களும் வந்திருந்தனர்.

மாலையில் 6.05க்கு மாவீரர் பணிக்குழுத் தலைவர் குட்டிமணி மாஸ்டர் தலைமையில் மாவீரர் லெப்டினன்ட் கேணல் தாஸின் தாயார் பிரதான ஈகைச்சுடர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து 856 வித்துடல்களுக்கு முன்னால் அமர்ந்து கதறி அழுத வண்ணம் மாவீரர்களின் பெற்றோர்கள் சுடரேற்றினார்கள்.

தொடர்ந்து அகவணக்கம் மாவீரர் தின பாடல் ஒலிக்கப்பட்டது. மக்களின் கதறி அழுத வண்ணம் காணப்பட்டனர். நினைவேந்தலில் ஈடுபட்ட அனைவருக்கும் நடுகைக்கு தென்னம்பிள்ளையும், இரவு நேர உணவும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பொத்துவில் பிரதேச சபையின் உபதவிசாளர் பெருமாள் பார்த்திபன், கல்முனை மாநகர சபை உறுப்பினர் கே.சிவலிங்கம், முன்னாள் உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார், மாணவர் மீட்புப்குழு தலைவர் செல்வராஜா கணேஷ், பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர்களான த.சுபோதரன், ந.சசிதரன் உள்ளிட்ட பல அரசியல்வாதிகள் அங்கு கலந்து கொண்டார்கள். நன்றியுரையை காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் நிகழ்த்தினார்.

அங்கு வந்த வாகனங்கள் பிரதான வீதியை அடைவதற்கு பலமணி நேரம் எடுத்தது.

மாவீரர் பணிக்குழு இம்முறை பாரியளவில் சிறப்பாக ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் யூறியா விநியோகம்





(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு கமநல பிரதேசத்திற்குட்பட்ட 1,444 ஏக்கர் சாகுபடி வயலுக்கான யூறியா பசளை நேற்றுமுன்தினம் விநியோகம் செய்யப்பட்டது.

காரைதீவு பிரதேச கமநல சேவைகள் நிலையப் பொறுப்பதிகாரி மார்க்கண்டு சிதம்பரநாதன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

நிகழ்வில் காரைதீவு பிரதேச சபைதவிசாளர்கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் மற்றும் விவசாய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு இதனை வழங்கிவைத்தார்கள். இதன்போது சத்ததூட்ட கொம்போஸ் பசளையும், திரவ கொம்போஸ் பசளையும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி வைக்கப் பட்டன.

யூரியா பசளை ஏக்கர் ஒன்றுக்கு 63 கிலோ வீதம் வழங்கப்பட்டது. 50 கிலோ யூரியா பசளை பொதியின் விலை 10 ஆயிரம் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்கு வடக்கு மக்கள் மீது திடீர் கரிசனை வரக்காரணம் என்ன?

## சிவசக்தி ஆனந்தன் கேள்வி



பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், வடக்கில் உள்ள தமிழ் மக்கள் மீது திடீரென கரிசனை காட்டுவதற்கு காரணம் என்ன என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் கேள்வி எழுப்பியுள்ளார். பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரின் வடக்கிற்கான மூன்று நாள்கள் திடீர் பயணம் பல்வேறு திரை மறைவு நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டிருக்கலாம் என்றும் சிவசக்தி ஆனந்தன் சந்தேகம் வெளியிட்டுள்ளார். குறிப்பாக, வடக்கு மாகாணத்தை மையப்படுத்தி இராஜதந்திர முரண்பாடுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க அவர் முனைகின்றாரா என்றும் சிவசக்தி ஆனந்தன் கேள்வியெழுப்பியுள்ளார். தமிழ் மக்கள் மீது கரிசனை கொள்பவராக பாகிஸ் தான் உயர்ஸ்தானிகர் இருந்திருந்தால் அந்த மக்களுக்காக ஐ.நாவில் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்க கூடாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். அத்தோடு யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்துக்கு ஆயுதங்களை பாரியளவில் வழங்கி கண்மூடித்தனமான அப்பட்டமான மனித உரிமைகளை மீறிய போருக்கு பாகிஸ்தான் காரணமாக இருந்திருக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுத்த பின்னர் வடக்கு மக்கள் மீது கரிசனை கொள்வது வேடிக்கையான விடயம் என்றும் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார்.

## துறைமுகத்தில் சிக்கியுள்ள பொருள்களை விடுவிக்க பணிப்பு!

கொழும்பு துறைமுகத்தில் கடந்த 10 வருடங்களாக சேமித்து வைக்கப்பட்டுள்ள பொருள்களை இரண்டு மாதங்களுக்குள் விடுவிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. துறைமுக அதிகார சபை மற்றும் சுங்க திணைக்களத்துக்கு துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் உள்ள 108 கொள்கலன்கள் மற்றும் களஞ்சியசாலைகளை பார்வையிட்ட பின்னர் அமைச்சர் பின் வரும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

## மாவீரர்களை நினைவுகூர்ந்து அளவெட்டியில் அன்னதானம்!



யாழ் அளவெட்டிப் பகுதியில் அமைந்துள்ள நரசிங்க வைரவர் ஆலயத்தில் அன்னதான நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாவீரர் இறுதி நாளை முன்னிட்டு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன் அதனை தொடர்ந்து அன்னதான நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வை முன்னாள் வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் பிரபாகரன் ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் பாடசாலையின் பரிசளிப்பு விழா













(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையான மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி.தவத்திருமகள் உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இவ் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். சிறப்பு அதியாக கிழக்குப் பல்கலைகழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கணகசிங்கம் கலந்துகொண்டார்.

கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கெனடி, பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மாகாண, மாவட்ட மட்டங்களில் சாதனை படைத்த மாணவர்களும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் சிறப்பாக திறமைகளை வெளிகாட்டிய மாணவிகள் மற்றும் கல்வி பொது தராதர சாதாரண தரம், உயர்தரம் சித்தியடைந்த மாணவர்கள் இதன்போது அதிதிகளால் பதக்கங்கள் அணிவித்து, சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்விற்கு பாடசாலையின் உப அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவிகள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## இலங்கையை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட மக்கள் சந்திப்பு ஹங்குராங்கெத்தையில் நேற்று நடைபெற்றது. நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸவால் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய விமல் வீரவன்ச மேலும் கூறியவை வருமாறு:–

இலங்கை பொருளாதார ரீதியில் பலமிழந்துள்ளது. இதை வைத்துப் பலம் பொருந்திய நாடுகள் இலங்கையின் கழுத்தை இறுக்கிப் பிடிக்க முற்படுகின்றன. தமது உபாயத்துக்குள் இலங்கையைக் கொண்டுவருவதற்கு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றன. தமது நாட்டு ரூபாவை இலங்கையில் செயற்படுத்துவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. அவ்வாறு நடந்தால் இலங்கை இந்தியாவின் மாநிலமாக மாறக்கூடிய சூழ்நிலைமை தானாகவே உருவாகிவிடும்.

மறுபுறத்தில் நாட்டில் போராட்டங்களைத் தூண்டிவிட்டு, அராஜக நிலைமையொன்றை உருவாக்குவதற்கு மேற்குலக நாடுகள் திட்டம் தீட்டுகின்றன. ‘ஹெட்டி’யில் போன்று இலங்கையிலும் ஆட்சி கட்டமைப்பு இல்லாத நிலைமையைத் தோற்றுவித்து, நாட்டைச் சீரழிக்க முற்படுகின்றன. இதற்காக ‘என்ஜீஓ’ காரர்கள் தூண்டிவிடப்படுகின்றனர். ஆசிரியர்களுக்கான ஆடையில் மாற்றம் வேண்டும் எனக் கூறுவது இந்த நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமாகும் – என்றார்.

## தமிழ், முஸ்லீம்......

(முதலாம் பக்கத் தொடர்சி)

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு,:–

யாழ். பற்றிக்ஸ், மன்னார் சேவியர்ஸ் ஆகிய கல்லூரி அணிகள், எனது தொகுதி கொழும்புக்கு வந்து, 20 வயதுக்கு உட்பட்ட தேசிய பாடசாலை கால்பந்து வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடுகின்றார்கள். எவ்வளவு மகிழ்ச்சியான ஒரு தருணம். கால்பந்தில் தமிழ் பிள்ளைகளுக்கு இருக்கக்கூடிய திறமைகளைப் பாருங்கள்.

அமைச்சர் ரொஷான் ரணசிங்க, நீங்கள் இளைஞர். புதிதாக சிந்திக்கக்கூடியவர். கிரிக்கெட் இந்நாட்டின் ஐந்தாவது மதம். அதைக்கொண்டு அரசியல்வாதிகள் நிலைநாட்டத் தவறிய இன ஒற்றுமையை நிலைநாட்டுங்கள். கிரிக்கெட்டை, கால்பந்தை, விளையாட்டைக் கொண்டு தேசிய ஐக்கியத்தை உருவாக்க உழையுங்கள்.

இன்று தேசிய விளையாட்டு அணிகளில்தமிழ்,முஸ்லிம்வீரர்களுக்கு விழும் ’வெட்டு’க்களை நிறுத்துங்கள். இங்கே பிரச்சினை என்னவென்றால், இலங்கையின் ஈழத்தமிழ், மலையகத் தமிழ், முஸ்லிம் விளையாட்டு வீரர்களுக்குத் திறமை இருந்தும் இடமளிக்கப்படுவதில்லை என்பதுவும், திறமைகளை வளர்த்துக்கொள்ள அரச கட்டமைப்பு வளங்களை வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் வழங்குவதில்லை என்பதுவும்தான். இதற்கு என்ன காரணம்? ஒளிவு மறைவு இன்றி அனைத்தும் சிங்கள – பௌத்த மயம் என்ற பெருந்தேசியவாதம்தானே.

இந்தியா, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா நாடுகளிலும் இனவாதம் முழுக்க இல்லாமல் இல்லை. ஆனால், அவற்றையும் மீறி இந்நாட்டு அணிகளில் இன, மத, நிற வாதங்களை மீறி பன்மைத்தன்மை இருப்பதைப் பார்க்கின்றோம். உலகக் கிண்ணக் கால்பந்துபோட்டிகளின், வெள்ளைக்கார நாட்டு அணிகளில் கறுப்பின வீரர்கள் கணிசமாக இடம் பெறுவதைப் பாருங்கள். இங்கே இது அறவே இல்லை. அதைப் பார்த்தாவது திருந்துங்கள்.

ஐயாம் எ ஸ்போர்ட்ஸ்மேன். நான் ஒரு விளையாட்டு ஆர்வலன். விளையாடும் வீரன். இந்த நாட்களில் இரவுகள் முழுக்க உலகக் கிண்ணக் கால்பந்து ஆட்டங்களைப் பார்க்கின்றேன். இலங்கையில் கால்பந்து சம்மேளனம் செயற்படவில்லை. இன்று சம்மேளனம் இடைநிறுத்தம் ஆகியுள்ளது. முன்னாள் தலைவரின் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டு ஒரு அறிக்கை உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தவறு செய்தவர்களைத் தூர தள்ளி வைத்துவிட்டு, தைரியமாக முடிவுகளை எடுத்து, புதிய தேர்தல்களை நடத்தி, புதிய கால்பந்து சம்மேளனச் செயற்குழு அமைத்து செயற்படுங்கள் – என்றார்.

## மக்களின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

–இவ்வாறு ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

கொத்மலை தேர்தல் தொகுதியின் மக்கள் சந்திப்பு கூட்டம் கொத்மலை – பூண்டுலோயா பகுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டை விட்டோடிய பஸில் ராஜபக்ஷ அண்மையில் நாடு திரும்பினார். பலமான அரசியல் இயக்கத்தை அவர் உருவாக்கபோவதாக சிலர் கூறித் திரிகின்றனர்.

விமான நிலையம் வந்த பஸிலுக்கு அவரின் சகாக்கள் மற்றும் அடியாட்களால் அரச அனுசரணையுடன் வரவேற்பளிக்கப்பட்டது. ஆனால், தான் நாட்டைவிட்டு செல்ல முற்படுகையில் விமான நிலைய ஊழியர்கள் தன்னை எப்படிக் கவனித்தார்கள் என்பதை பஸில் ராஜபக்ச மறந்துவிடக்கூடாது. மக்கள் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. கோரிக்கைகள் அவ்வாறே உள்ளன.

கொள்ளையர்கள், பொருளாதாரத்தை நாசமாக்கியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். கொள்ளையடிக்கப்பட்ட வளங்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என மக்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். இதையும் பஸில் உள்ளிட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேவேளை, ஹிட்லர் பற்றி கதைப்பதற்கு முன்னர் ‘காற்சட்டை’யை எப்படி சரியாக அணிவது என்பதை ரணில் புரிந்துகொள்ள வேண்டும் – என்றார்.

## 25 மீனவர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

25 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து இன்று காலை புறப்பட்ட மீனவர்களின் ட்ரோலர் படகுகளே இவ்வாறு கடற்படையினர் பிடித்துள்ளனர்.

பிடிக்கப்பட்ட படகுகள் நாளை காலை மயிலிட்டித் துறை முகத்திற்கு கொண்டு வரப்படவுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2022 இல் வெளியிடப்பெற்றது.